

Composed by Rajaji

Ragam: Ragamalikai

Thalam: Aadhi

குறை ஒன்றும் இல்லை
மறை மூர்த்தி கண்ணா
குறை ஒன்றும் இல்லை கண்ணா
குறை ஒன்றும் இல்லை கோவிந்தா

கண்ணுக்குத் தெரியாமல் நிற்கின்றாய்
கண்ணா
கண்ணுக்குத் தெரியாமல் நின்றாலும் எனக்கு
குறை ஒன்றும் இல்லை
மறை மூர்த்தி கண்ணா

வேண்டியதைத் தந்திட
வேங்கடேசன் நின்றிருக்க,
வேண்டியது வேறில்லை மறை மூர்த்தி கண்ணா
மணிவண்ணா...மலையப்பா...கோவிந்தா! கோவிந்தா!

திரையின் பின் நிற்கின்றாய் கண்ணா
கண்ணா
திரையின் பின் நிற்கின்றாய் கண்ணா
உன்னை மறை ஓதும் ஞானியர் மட்டுமே காண்பார்
என்றாலும் குறை ஒன்றும் எனக்கில்லை கண்ணா
குன்றில் மேல் கல்லாகி நிற்கின்ற வரதா
குறை ஒன்றும் இல்லை
மறை மூர்த்தி கண்ணா
மணிவண்ணா...மலையப்பா...கோவிந்தா! கோவிந்தா!

கலிநாளுக்கிரங்கி
கல்லிலே இரங்கி
சிலையாகக் கோயிலில் நிற்கின்றாய் கேசவா
குறை ஒன்றும் இல்லை
மறை மூர்த்தி கண்ணா
யாரும் மறுக்காத மலையப்பா...
உன் மார்பில்;

ஏதும் தர நிற்கும்
கருணைக் கடலன்னை
என்றும் இருந்திட
ஏது குறை எனக்கு?
ஒன்றும் குறை இல்லை
மறை மூர்த்தி கண்ணா
மணிவண்ணா...மலையப்பா...கோவிந்தா! கோவிந்தா!